6925036

No. of Printed Pages : 8

**6811**

பதிவு எண் | 1 | 7 | 8 | 4 | 0 | 9 | 8 |

# தமிழ் இரண்டாம் தாள்

# Language – Part I – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(ii) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பென்சில் பயன்படுத்தவும்.

குறிப்பு : (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் 38-க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5x1=5

1. பல் + தீது என்பது ________ எனப் புணரும்.
   (அ) பல் தீது (ஆ) பஃறீது (இ) பல தீது

2. மேற்கு + நாடு என்பது ________ எனச் சேரும்.
   (அ) மேற்குநாடு (ஆ) மேநாடு (இ) மேனாடு

3. நிரை கவர்தல் என்பது ________ திணை.
   (அ) கரந்தை (ஆ) உழிஞை (இ) வெட்சி

[ திருப்புக

4. 'நல்லவை' இச் சொல்லை அலகிட்டால் _________ எனப் பிரியும்.
(அ) நேர் நேர் (ஆ) நிரை நேர் (இ) நேர் நிரை

5. கீழ் வருவனவற்றுள் பொதுமொழியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(அ) கண் (ஆ) அந்தமான் (இ) படம் பார்த்தான்

பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக. 5x1=5

6. வருக! வருக! என்பது _________.

7. இது செய்வாயா ? என்னும் வினாவிற்கு 'வயிறு வலிக்கும்' எனக் கூறுவது _________ விடை.

8. மலர்ப் பாதம் என்பதன் உருவகம் _________.

9. நெய்தல் திணைக்குரிய தொழில் _________.

10. புகழ்வது போலப் பழிப்பதும் பழிப்பது போலப் புகழ்வதும் _________ அணி.

பகுதி - 3

சுருக்கமாக விடையளிக்கவும். 10x1=10

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றினைச் சான்று தந்து விளக்குக.

12. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.
நான் தமிழ்ப் புத்தகம் படிக்க வேண்டும்.

13. தொகைச் சொல்லை விரித்தெழுதுக.
மூவேந்தர்

14. இமயமலை மிகவும் உயரமானது – உணர்ச்சித் தொடராக மாற்றுக.

15. கீழ்க்காணும் சொற்றொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.
தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.

16. சந்திப் பிழை நீக்கி எழுதுக.
    கைதொழில் ஒன்றைக் கற்றுக்கொள்.

17. பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
    போஸ்ட் ஆபீஸிற்குச் சென்று தபால் கார்டு வாங்கி வா.

18. கீழ்க்காணும் உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைக்கவும்.
    நிலவும் வானும் போல

19. வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.
    இன்னிக்கி ஒரு கிலோ அவரக்கா வாங்கி வந்தேன்.

20. பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.
    ஓட்டுநர் நடத்துநர் முதலான பணிகளுக்கு உடற்கூறு தகுதியுடையவர்கள் மட்டுமே சேர இயலும்

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 10)

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு** விடையளிக்கவும். 5x2=10

21. மகரக் குறுக்கத்தை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

22. பெயரெச்சம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

23. இளங்குறித்தல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

24. பாம்போ ? கயிறோ ? – எவ்வகை வினா ?

25. கருங்குயில் – புணர்ச்சி விதி தருக.

26. வெண்பாவின் வகைகள் எவையேனும் இரண்டினை மட்டும் எழுதுக.

27. வாகைத்திணை என்பது யாது ?

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 50)

குறிப்பு : பகுதி 3 -இல் வினா எண் 35 -இல் **காது கேளாத மாணவர்களுக்கு மட்டும்** மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் இரண்டினுக்கு** விடையளிக்கவும். **2x5=10**

28. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது ?

29. 'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்'

– இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

**அல்லது**

சொற்பொருள் பின்வருநிலை அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

### பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் இரண்டிற்கு** ஒவ்வொன்றிற்கும் **அரைப்பக்க** அளவில் விடையளிக்கவும். **2x5=10**

31. அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

32. 'குறட்டை ஒலி' கதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்கி எழுதுக.

33. தமிழகத்தில் நூலகத் துறையின் வளர்ச்சி பற்றிக் கட்டுரை வரைக.

### பகுதி - 3

34. (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. **3+2=5**

பாப்பா! போய் யூனிபார்ம் மாற்றிக் கொண்டு வா என்றாள் அவள் தாய். போம்மா என்று கூறிக் கொண்டு ஃபேனைச் சுழலவிட்ட பாப்பா டிவியைப் போட்டாள். ஸ்கூல் விட்டு வந்தவுடன் எதற்கு டிவி ? ஹோம் ஒர்க் செய்துவிட்டு அப்புறம் பார்க்கலாம் என்றாள் அவள் தாய்.

(ஆ) கீழுள்ள தொடர்களில் உள்ள கோடிட்ட இடத்தை உரிய தமிழெண்களால் நிரப்புக.

(i) உன் வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை _______ (45).

(ii) உன் இல்லத்தின் எண் _________ (67).

(iii) ஓட்டுரிமைக்காக வரையறுக்கப்பட்ட வயது _________ (18).

(iv) பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் நீ பெற விரும்பும் மதிப்பெண் ___________.

35. (அ) கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

Maps serve better than the printed pages for giving many kinds of information. Infact, people made and used maps before they learned how to read and write. Explorers have found maps that had been made by their ancestors. Sometimes these maps were carved on stones.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டினுக்கு இணையான தமிழ் பழமொழிகளை எழுதுக.

(i) No pain no gain

(ii) Man Proposes God disposes

(iii) Money make many things

(iv) All that glitter is not gold

35. **குறிப்பு :** காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x1=5

நம் உடல் உறுப்புகளில் குறைபாடு இருந்தாலும் உள்ளத்தில் சாதிக்க வேண்டும் என்ற நெருப்பு இருந்தால் நாம் வெற்றியின் சிகரத்தை அடையலாம். அமெரிக்காவின் மிகச் சிறந்த பெண்மணி என்று புகழ்பெற்ற கெலன் கெல்லர் பேசும், பார்க்கும், கேட்கும் திறன்கள் அற்றவர். பீத்தோவன் உலகின் மிகச் சிறந்த இசையை அமைத்தபோது அவருக்குக் காது கேட்காது. மில்டன் தனது உலக மகா காவியமான ''இழந்த சொர்க்கம்'' என்ற காவியத்தை இயற்றியபோது அவருக்குக் கண் தெரியாது. எனவே, உடலில் உள்ள குறைபாடுகள் சாதிப்பதற்குத் தடையே அல்ல.

(i) கெலன் கெல்லர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?

(ii) பீத்தோவன் எத்துறையில் வல்லவர் ?

(iii) மில்டன் எழுதிய நூல் எது ?

(iv) சாதிக்க வேண்டும் என்ற நெருப்பு எங்கே இருக்க வேண்டும் ?

(v) உடலில் குறைபாடுகள் இருந்தால் சாதிக்க முடியுமா ?

## பகுதி - 4

**36.** கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றினுக்கு** விடையளிக்கவும். **1x5=5**

(அ) கீழ்க்காணும் கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

விமலன் விடுமுறை நாளென்பதால் தன் தந்தையுடன் வயலுக்குச் சென்றான். தந்தை நிலத்தை உழுது கொண்டிருக்கும்பொழுது பூமிக்கடியில் கலப்பை சிக்கியது. அதைத் தோண்டிப் பார்த்த பொழுது ..................

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

பள்ளி அல்லது கடல்

## பகுதி - 5

**37.** கீழ்க்காணும் பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களுள் ஏதேனும் **ஐந்தினை** எடுத்தெழுதுக. **1x5=5**

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்.
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.

- பாவேந்தர் பாரதிதாசன்

## பகுதி - 6

**38.** பாரதி என்பவர் வங்கிக் கணக்கிலிருந்து ரூ.5000 எடுப்பதற்காக வங்கிக்குச் சென்றுள்ளார். தேர்வர் தன்னை பாரதியாக நினைத்து, விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினைத் தேர்ந்தெடுத்துப் பூர்த்தி செய்க. **1x5=5**

## பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்கவும். **3+2=5**

அமுதா பள்ளிக்குச் செல்லும் வழியில் அந்தக் காட்சியை நாள்தோறும் காணத் தவறுவதில்லை. கண்ணொளி இழந்த மூதாட்டி ஒருவர், சாலை ஓரத்தில் உட்கார்ந்திருப்பார்.

அவருடைய கைகள் இரண்டும், கூடை முடைதலில் விரைவாகச் சுழன்று கொண்டிருக்கும். எப்படி இவரால் இவ்வளவு விரைவாகச் செயல்பட முடிகிறது என்று அமுதா வியப்படைவாள்.

ஒருநாள், தன் இரு கண்களையும் கட்டிக் கொண்ட அமுதா, வீட்டிற்குள் அங்கும் இங்கும் நடந்து பார்த்தாள். அங்கு இருந்த மேசையின் மீது மோதிக் கொண்டாள். அப்போதுதான் அவர்கள் எத்தகைய துன்பத்தை அடைகிறார்கள் என்று எண்ணிப் பார்த்து மனம் வருந்தினாள்.

(i) மாற்றுத் திறனாளரிடம் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள் ?

(ii) அமுதாவைப் போல நீங்களும் கண்ணைக் கட்டிக் கொண்டு நடந்த அனுபவம் பெற்றிருக்கிறீர்களா ?

(iii) நீங்கள் விழிமாற்றுத் திறனாளிக்கு உதவிய முறையில் ஒன்றினை எழுதுக.

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்கவும்.

மணிவண்ணன் பத்தாம் வகுப்பில் படித்து வருகிறான். மேற்கொண்டு திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான். வீட்டில் அவன் பெற்றோரோடு ஒரு நாள் பேசிக் கொண்டிருக்கும் போது, தன் எண்ணத்தை வெளியிடுகிறான். அதைக் கேட்டதும், தந்தை அவன் மீது சினம் கொள்கிறார். ஏனெனில், அவன் மிகச் சிறந்த பொறியாளராக வர வேண்டும் என்பது அவருடைய விருப்பம். மணிவண்ணன் தந்தையிடம் எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது என்று தடுமாறுகிறான்.

(i) பத்தாம் வகுப்பிற்குப் பிறகு நீ என்ன படிக்க விரும்புகிறாய் ?

(ii) மணிவண்ணனைப் போன்ற சூழ்நிலை உனக்கு ஏற்பட்டால் நீ எவ்விதம் எதிர் கொள்வாய் ?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

1x10=10

40. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றினுக்கு** விடையளிக்கவும்.

(அ) நீவிர் குடியிருக்கும் பகுதிக்குச் சிற்றுந்து வசதி செய்து தருமாறு போக்குவரத்துத் துறை மேலாண் இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.

**அல்லது**

(ஆ) பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

### பகுதி - 2

41. கீழுள்ள வினாக்களுள் **எவையேனும் ஒன்றினுக்குக்** குறிப்புகளைக் கொண்டு **ஒரு பக்க** அளவில் கட்டுரை எழுதித் தலைப்பு ஒன்று தருக. 1x10=10

(அ) முன்னுரை - சிக்கனமும் சிறுசேமிப்பும் - சேமிப்பின் நோக்கம் - சேமிப்பு பற்றிய பழமொழிகள் - சேமிக்கும் வழிகள் - சேமிப்பின் பயன்கள் - முடிவுரை.

**அல்லது**

(ஆ) முன்னுரை - சுற்றுச் சூழல் - மாசுக் கட்டுப்பாடு - நீர் மாசு - நில மாசு - காற்று மாசு - தீமைகள் - நீக்கும் வழிகள் - முடிவுரை.

- o 0 o -